28th February 1968]

மெண்டிற்கும் முன்பிருந்த ரெவின்யூ அமைச்சருக்கும் எழுதியிருக்கிறேன். ஆனால் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம் என்ன என்று புரியவில்லை. ஆகவே அவர்மீது இப்போதாவது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : தலைவரவர்களே, அதைத் தான் ஏற்கனவே சொன்னேன். பெருமாள்சாமி என்பது இவர் பெயராகும். முதலில் அவர் 1—12—1962 முதல் 31—7—1964 வரையில் பல தவறுகளுக்காக நீக்கி வைக்கப்பட்டிருந்திருக்கிறார். மறுபடியும் 64-ல் சேர்க்கப்பட்டு இருக்கிறார். அது முந்திய அரசாங்கம் இருந்தபோது . பிறகும் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்தபிறகு 6—3—1967-லிருந்து 20 நாட்கள் தான் தாக்குபிடிக்க முடிந்து, பிறகு 1—4—1967 லிருந்து நீக்கப்பட்டார். முன்னால் நடந்த கதைதான் இது. இந்த கிராமத்திற்கே தப்புகுண்டு என்று பெயராகும். (சிரிப்பு) ஜெங்கல் பட்டி என்ற மற்றொரு கிராமத்து மணியத்தையும் அவரிடம் ஒப்புவித்து, அங்கே 950 ரூபாய் தவறு செய்து இருக்கிறார். இந்தத் தவறு நடந்த நேரம் 1966 நவம்பர் முதல் அடுத்த ஜனவரி வரையில் ஆகும். இதைத் தொடர்ந்து நடவடிக்கை எடுத்தாலும், கிரிமினல் வழக்கு தொடரவிருக்கிறது. டிபார்ட்மெண்ட் வழக்கும் எடுக்கப்படும். இந்த அரசாங்கம் வந்த பிறகுதான் இந்த தவறுகள் நடந்தன என்று உறுப்பினரும், இந்த சபையும் கருதக்கூடாது.

Mr. Chairman : Question 121 is postponed.

Inter-caste Marriages

* 122 *Q.*—**Thiru N. R. THIAGARAJAN :** Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :—

(*a*) the number of inter-caste marriages that took place in Tamil Nad after the introduction of the scheme of a ward of medals to the couples of inter-caste marriages ; and

(*b*) whether medals have been awarded to all such couples ?

கலப்பு மணங்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கலப்பு மணம் செய்து கொண்ட மணமக்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் உருவாக்கப்பட்ட பின் தமிழ் நாட்டில் எத்தனை கலப்பு மணங்கள் நடந்துள்ளன ?

(இ) அவ்வாறு மணம் புரிந்து கொண்ட எல்லா மணமக்களுக்கும் பரிசளிக்கப்பட்டுவிட்டதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : (அ) அரிசன நலத் துறை இயக்குநரிடம் உள்ள தகவல்களின்படி 7 கலப்பு மணங்கள் நடந்துள்ளன.

(இ) இல்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, கலப்பு மணம் செய்து கொண்ட மணமக்களுக்கு பரிசளிக்கும் திட்டம் வருவதற்கு முன்பு கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்கு பரிசு கொடுக்கப்படுமா ? அப்படியென்றால் எவ்வளவு கொடுக்கப்படும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : தலைவரவர்களே, அதற்குரிய திட்டம் இன்னும் சரியான முறையில் தீட்டப்படவில்லை. அதைக் கனம் இயக்குனர் அவர்கள் மாவட்ட கலெக்டர்களோடு

கலந்து அதற்குரிய திட்டத்தை தயார் செய்து கொண்டிருக்கிறார். அதற்கு பிறகு தான் எந்த அடிப்படையில் கொடுப்பது என்பது முடிவு செய்யப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : இப்போது திருமணம் செய்து கொண்டுள்ள 7 பேர்களுக்கும் கொடுக்கப்பட்டு விட்டதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : இது வரை கொடுக்கப்படவில்லை.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் : தலைவரவர்களே, இவ்வாறு கலப்பு திருமணம் செய்து கொண்டவர்கள் எல்லாம் சௌகரியமாக இருக்கிறார்களா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : எல்லோரும் நலமாக இருக்கிறார்கள் என்றே கருதுகிறேன்.

Rest Houses

*123. *Q.*—THIRU N.R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to increase the number of rest houses in Courtallam and Kodaikanal ?

தங்கும் விடுதிகள்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட வினவுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

குற்றாலத்திலும், கொடைக்கானலிலும் தங்கும் விடுதிகள் அதிகப்படுத்தும் உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து: ஆம். குற்றாலத்தில், கேரள அரசுக்குச் சொந்தமான "கார்ப்பியன் மாளிகையை" விலைக்கு வாங்கி, அதை ஒரு சுற்றுலா மாளிகையாக மாற்றவும், கொடைக்கானலில் குறைந்த வருமானக்காரர் தங்கும் வகையிலான ஒரு சுற்றுலா விடுதி கட்டவும், அரசு உத்தேசித்துள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவரவர்களே, எப்போது இந்த வேலை ஆரம்பிக்கப்படும். இதில் எத்தனை பேர் தங்குவதற்கு வசதி செய்யப்படும்.?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : தலைவரவர்களே, ஏற்கெனவே 1964-ம் ஆண்டில் முடிவெடுக்கப்பட்டு 28·72 ஏக்கர் நிலப் பரப்பு அமைந்திருக்கிறது. இதற்கு கேரள அரசுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு விலைப் பத்திரம் பரிசீலனையில் இருந்து வருகிறது. பொதுப்பணித் துறை இதன் விலை ரூ. 10 லட்சம் ஆகலாம் என்று கருதுகிறது. மேலும், இதற்குறிய வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

திரு. வி. கே. ராமசாமி முதலியார் : தலைவரவர்களே, கொடைக்கானலில் ரெஸ்ட் ஹௌஸ் கட்டுவதற்கு சர்க்கார் உத்தரவு போட்டிருந்தார்கள். நில ஆர்ஜிதம் செய்வதில் தாமதம் ஏற்பட்டதின் காரணமாக இந்த வேலை தாமதமாகி வருவதாக கேள்விப்பட்டேன். இது எப்போது முடியும் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணி முத்து : தலைவரவர்களே, இதற்கான நிலத்தை கையகப்படுத்துவதற்கான வேலை மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அந்த இடத்தின் சொந்தக்காரர்கள், ஒரு அமெரிக்கன் கம்பெனியும், சட்டநாத கரையாளர் என்பவரும் இதற்கான நீதிமன்றத்திற்கு சென்று வழக்காடிக்கொண்டு வருகிறார்கள். விரைவில் வழக்கை